**கொபேய்கனே பிரதேச சபை - 2022**

----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொபேய்கனே பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து கொபேய்கனே பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும்

போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 25,365 பெறுமதியான இயந்திரங்களும் உபகரணங்களும் மற்றும் ரூபா 236,000 பெறுமதியான வேனும் மீளாய்வாண்டின் போது மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்குறிப்பின் மூலம் சரிசெய்யப்படும். | சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்பணங்களின் மீதி ரூபா 102,748 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| 09 கணக்கு விடயங்களின் நிதிக்கூற்றுக்களுக்கு இணங்கிய பெறுமதிக்கும் பட்டோலைக்கு இணங்கிய பெறுமதிக்குமிடையே மொத்தமாக ரூபா 24,238,819 வித்தியாசம் காணப்பட்டது. | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பட்டோலைகளுக்கு இணங்க சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்னைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலிவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- | --- |
| (அ) 1988 பிரதேச சபை (நிதியும் நிருவாகமும்) விதி | | | |
| (i) சட்ட விதி 59 இலிருந்து சட்ட விதி 66 வரை | வருட ஆரம்பத்திலேயே சபை அதிகாரப் பிரதேசத்திலுள்ள கைத்தொழில்கள் தொடர்பாக மீளாய்வு செய்து கைத்தொழில் வரி பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | அனைத்து கைத்தொழில்களை யும் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய சட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்ட 04 வைப்புக்களின் பெறுமதி ரூபா 277,657 தீர்த்துவைக்கப்பட்டிருக் கவில்லை. | வருமானத்திற்கு செலவுவைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2019 சனவரி 10 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் 2019/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் I ஆம் மற்றும் II ஆம் பிரிவுகள் | கடைகள் குத்தகைக்கு வழங்கப்படுகின்ற உடன்படிக்கை செய்யப்பட்ட காலம் சபை தீர்மானத்தின் படி 03 ஆண்டுகள் வரையாகவும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் 03 இலிருந்து 30 ஆண்டுகள் வரையாக இருக்க வேண்டிய போதிலும் வியாபார கடைத்தொகுதி கடைகளுக்கான உடன்படிக்கைகளில் குத்தகை காலம் குறிப்பிடப்படவில்லை. | உடன்படிக்கையினை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்கூறிய சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 17,294,652 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 3,241,550 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான (முன்னைய வருட நிலுவைகள்) நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் உள்ளவாறான (முன்னைய வருட நிலுவைகள்) நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| i. | வீத வரியும் வரியும் | 749 | 749 | 749 | 122 | 749 | 749 | 460 | 753 |
| ii. | வாடகை | 10,000 | 1,000 | 643 | 357 | 890 | 989 | 989 | - |
| iii. | அனுமதிப்பத்திர கட்டணம் | 700 | 700 | 104 | 596 | 141 | 141 | 580 | 439 |
| iv. | ஏனைய வருமானம் | 22 | 22 | 15 | 43 | 22 | 22 | 65 | 42 |
| | மொத்தம் | 11,471 | 2,471 | 1,511 | 1,118 | 1,802 | 1,901 | 2,094 | 1,234 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| (i) வீதவரி மதிப்பீடானது 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை மதிப்பீட்டுத் திணைக்களத்தினுாடாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் பிரதேச சபையினால் 2015 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டின் அடிப்படையில் தற்பொழுது வீதவரி அறவிடப்படுகின்றது. | சபையின் வீதவரி வலயத்திற்குரிய வீதவரி ஆதனங்களை இனங்கண்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டு வீதவரி மதிப்பீட்டிற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | வீதவரி ஆதனங்களை காலரீதியாக மதிப்பீடு செய்து வீதவரி அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மொத்த நிலுவை வீதவரி மீதியானது ரூபா 681,669 தொகையில் ரூபா 229,788 தொகை அதாவது 03 சதவீதம் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவை மீதியாகும். | பதில் வழங்கப்படவில்லை. | நிலுவையான வீதவரி அறவிடப்படுதல் வேண்டும். |

**(ஆ) ஏக்கர் வரி**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் 16 பிரிவுகளில் 273 ஆதனங்களிலிருந்து ரூபா 51,525 மீதியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையான ஏக்கர் வரிப் பணத்தை அறவீடு செய்வதற்காக தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை ஏக்கர் வரியை துரிதமாக அறவீடு செய்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 அதிகாரச் சட்டத்தினால் ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொதுப்பயன்பாட்டு சேவைகள் மற்றும் வீதிகள் தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்தலும், நிருவகித்தலும், மக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரிகள் முதலிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின்கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழான 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப நியதிச்சட்டம் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 வரையும் உபநியதிச்சட்டம் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | கோழிக் கூடுகள் சம்பந்தமான உபநியதிச் சட்டத்தினை விதிப்பதற்காக தயாரிக்கப்பட்ட வரைபு உள்ளூராட்சி திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | சபைக்கு வருமானத்தை உழைக்க கூடிய வாய்ப்புபகளை இனங்கண்டு உபநியதிச்சட்டத்தை விதிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2. முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டிற்காக குத்தகைக்கு வழங்கக்கூடிய 21 சொத்துக்கள் கோள்விதாரர்கள் முன்வராமையின் காரணமாக வருமானம் உழைக்கும் செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்படாது காணப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | சபையின் சொத்துக்கள் சிறப்பாக பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) சபையின் ஆதனங்களை முறையாக மதிப்பீடு செய்து அப்பெறுமதியை ஏடுகளில் உள்ளடக்குவதற்கும் காணி கட்டடிடங்களின் மீளாய்வினை காலரீதியாக மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய ஆதனங்களை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆதனங்களை முறைப்படியாக மதிப்பீடு செய்வதற்கும் கட்டிடங்களின் மீளாய்வினை உரிய காலத்தில் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) சபையினால் வெளித்தரப்பினர்களுக்கு வருமானத்தை உழைக்கும் இயந்திரங்கள் நீர் பவுஸர்களை வழங்கும் போது அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய ஒரு பதிவேடுநாளதுவரையாகப் பேணப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படவில்லை. | உரிய ஆதனங்களை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானம் உழைக்கும் இயந்திரங்களுக்கான பதிவேட்டினை நாளதுவரையாக பேணுதல் வேண்டும். |
| (இ) மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களுக்கு மத்தியில் தும்பு தொழிற்சாலைக்கும் பாம் நிறுவனத்திற்கும் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் அங்கீகாரமின்றி சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தினை வழங்குவது சம்பந்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறையினை முறைமைப்படுத்துதல் வேண்டும். |

## 3.4 மனிதவளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் இறுதிவரை ஊழியர் கடன் மீதியினுள் ஊழியர்கள் தொடர்பான ரூபா 149,992 தொகையான அறவிடப்படாத மீதி காணப்பட்டது. | இக்கடன் பணத்திற்குரிய உத்தியோகத்தர் தற்காலிகமாக வேலையிலிருந்து இடைநிறுத்தி வைப்பதற்கு உள்ளாகி திணைக்கள விசாரணைகளுக்கு உட்பட்டிருந்தார். | ஊழியர் கடனை முறையாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) சபையினால் பேணப்பட்டு வருகின்ற 25 சொத்துக்களை சபையினால் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சொத்துக்களைப் பொறுப்பேற்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | சொத்துக்களை துரிதமாக சபையினால் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) சபையின் சொத்துக்களை பாதுகாத்தல் மற்றும் உள்ளமையை உறுதிப்படுத்தும் வகையில் காணிகளையும் கட்டிடங்களையும் சுற்றிபாதுகாப்பு வேலி நிர்மாணிக்காததுடன் சபையின் காணிகளும் கட்டிடங்களும் வருடாந்த மீளாய்விற்கு உட்படுத்தப்படவில்லை. | அத்தியவசியமானவையாக இனங்காணப்பட்ட காணிகளின் பாதகாப்பு வேலியினை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் மீளாய்வு நடவடிக்கையினை மேற்கொண்டு 30 சொத்துக்கள் அளவில் இனங்காணப்பட்டுள்ளன. | சபையின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு போதியளவு கட்டுப்பாட்டு நடைமுறைகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) சபையின் தேங்காய் விளைச்சல் காணிகளை குத்தகைக்கு வழங்காது சபையினால் விளைச்சல் வருமானங்களை சேகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தும் சபையின் தேங்காய் விளைச்சல் காணிகளை முறையாக இனங்கண்டு விளைச்சல் வருமானத்தை முறையாக சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்த வருமானங்கள் இழக்கப்பட்டிருந்தன. மேலும் | அடுத்துவரும் காலங்களில் தேங்காய் விளைச்சல் காணிகளை முறையாக இனங்கண்டு வருமானங்களை முறையாக சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களிலிருந்து கிடைக்க வேண்டிய வருமானத்தை முறையாகப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுதத்தல் வேண்டும். |

சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் சபையின் தேங்காய் விளைச்சல் காணிகளை குத்தகைக்கு வழங்காது அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக சபையினால் லைவக்கப்பட்டிருந்த காணிகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.6 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ரூபா 1,275,000 செலவு செய்து கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட பேல் இயந்திரம் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. | சபை பொது நூல் நிலையத்தின் மின்சார இணைப்பு மூன்று வழி மின்சார இணைப்பாக உள்ளதனால் அந்த இடத்தில் பேல் இயந்திரத்தினை ஸ்தாபித்து பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சபையின் சொத்துக்களை சிறப்பாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### பாதீட்டு கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 04 வருமான விடயங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்குமிடையே 25 சதவீதத்திலிருந்து 169 சதவீதம் வரையான முரண்களும் 05 செலவு விடயங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏறபாட்டிற்கும் உள்ளபடியான செலவுக்குமிடையே 14 சதவீதத்திலிருந்து 72 சதவீதம் வரையான முரண்களும் அவதானிக்கப்பட்டதன் காரணமாக பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படவில்லை. | சுட்டிக்காட்டப்பட்டுள்ள சிக்கலை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடைமுறைச் சாத்தியமாக பாதீட்டினைத் தயாரிப்பதற்கும் நிதி ஏற்பாட்டினை சிறப்பாக பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |